கட்டுவதற்கு அரசு அனுமதி அளித்து இருக்கிறது. அரசின் பங்காக ரூ. 3 லட்சத்து 80 ஆயிரம், பல்கலைக் கழகத்தின் மானியமாக ரூ. 2 இலட்சத்து 40 ஆயிரம் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அரியப்பாடி கிராம அரிசனமக்களுக்கு ஒதுக்கப்பட்ட வீட்டு மனைகள்

*வினா எண். 769 திரு. ப. சந்திரன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம் அரியப்பாடி கிராம அரிசன காலனி மக்களுக்கு அரசு வீடு கட்ட இடம் கொடுத்தும் அதில் அவர்கள் வீடு கட்டிக்கொள்வதை அந்த ஊர் மக்கள் தடுப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:

(அ) பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம் வந்தவாசி தாலுகா, அரியபாடி கிராம அரிசன காலனி மக்களுக்கு இது வரை அரசு மூலம் நிலம் கையகப்படுத்தி வீட்டு மனைகள் வழங்கப்படவில்லை. ஆனால் அந்த ஊர் மக்கள் சர்வே 109 மயானப்புறம்போக்கில் அரிசனங்கள் வீடுகள் கட்டிக்கொள்வதை ஆட்சேபிக்கிறார்கள்.

(ஆ) அந்த நிலம் மயானமாக ஜாதி இந்துக்களும், அரிசனங்களும் உபயோகிப்பதால் அவர்களின் ஆட்சேபனைகள் சரியே. வீடில்லா 19 ஏழை அரிசன குடும்பங்களுக்கு வீட்டுமனை அளிக்கும் கருத்துருவுக்கு 9-2-79-ல் அரசு ஆணை பிறப்பித்து உள்ளது. மேற்கொண்டு விதி முறைகளின்படி நடவடிக்கைகள் தொடரப்பட்டு வீட்டுமனைகள் வழங்கப்படும்.

திரு. ப. சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல் அந்த மயானப் புறம்போக்கிற்கு எவ்விதத் தொடர்பும் இல்லை. அவர்களுடைய குறைகள் எல்லாம் அந்தப் பகுதியில் அந்த அரிசன மக்கள் வாழ்வார்களானால், அந்தப் பகுதியில் இருந்து வரும் நீர் அங்கே அருகில் உள்ள ஊர் குளத்திற்கு வரும். எனவே அந்தக் குளத்து நீர் குடிப்பதற்கு ஏற்ற நிலை இல்லாமல் இருக்கும் என்ற காரணத்தால்தான் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். ஊரிலே பல கிணறுகள், குடி நீர் கிணறுகள் இருப்பதால், இப்படிப்பட்ட எதிர்ப்பு சொல்ல நியாயம் இல்லை. ஆகவே, அரசு உடனடியாக இதில் தலையிட்டு துரித நடவடிக்கை எடுக்குமா?

1979 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் ; மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட காரணம் சரியாக இருக்குமானால், நான் நெறியாளரை நேரில் அனுப்பி, அது உண்மை என்று அவர்களிடமிருந்து அறிக்கை வருமானால், அந்த இடத்திலேயே அவர்களுக்குப் பட்டா போட்டுத் தர அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

நடுவச்சேரி அரிசனக் குடியிருப்புக்கு குடிநீர் வழங்கல்.

*வினா எண். 770—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அவினாசி தாலுக்கா நடுவச்சேரி அரிசன மக்கள் குடி தண்ணீர் கிணறு வேண்டுமென 21-3-79 முதல் உண்ணா விரதம் இருக்க முடிவு செய்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:

(அ) உண்ணாவிரதம் எதுவும் நடக்கவில்லை.

(ஆ) அவினாசி வட்டம், நடுவச்சேரி அரிசன மக்களுக்கு குடிநீர் வசதிக்காக ரூ. 30,000 செலவு மதிப்பீட்டில் ஒரு கிணறு வெட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி தாலுக்கா நடுவச்சேரி அரிசன மக்கள் 21-3-79 அன்று உண்ணாவிரதம் இருப்பதாக அறிவித்து இருந்தார்கள். சுதந்திரம் வந்த 32 ஆண்டுகாலத்திற்குப் பிறகும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கம் வேண்டாம். சுதந்திரம் வந்தது எப்போது என்பது எல்லோருக்கும் தெரியும். நீங்கள் கேள்வியை ஆரம்பிக்கிறபோதே 5 நிமிடம் எடுத்துக் கொள்வீர்கள் போல் தெரிகிறது. சுருக்கமாகத் துணைக் கேள்வி போடுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, சுதந்திரம் வந்த 32 வருஷத்திற்குப் பிறகும் குடிநீர் கேட்டு உண்ணாவிரதம் இருக்க வேண்டிய இந்த அவல நிலையைப் போக்க, அரிசன மக்கள் வாழும் காலனிகள் எல்லாவற்றிலும் குடிநீர் வழங்க சிறப்புத் திட்டம் போட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்தத் துறையைப் பொறுத்தவரையில் ஒதுக்குகிற நிதியை வைத்துக் கொண்டுதான் சில பல கிராமங்களுக்கு குடி நீர் வசதி செய்து தர முடிகிறது. இங்கே இருக்கிற பிரச்னை